# திருமுருகாற்றுப்படையில் நக்கீரரின் கதையாடல்கள்

**முனைவர் க. வினோத்குமார்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை, தமிழ்நாடு

### முன்னுரை

தொல்காப்பியம் ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறும் போது கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகியோர் தாம் பெற்ற பெருவளத்தைத் தம்மைப் போல் இருக்கும் மற்றவருக்கும் ஆற்றுப்படுத்துவதாக உள்ளது. ஆனால் தொல்காப்பியம் புலவராற்றுப்படைக்கு இலக்கணம்ல்லவில்லை. புலவராற்றுப் படைக்குப் புறப்பொருள் வெண்பா மாலையின் ஆசிரியர் ஐயனாரிதனார் இலக்கணம் வகுத்துள்ளார். புறப்பொருள் வெண்பாமாலை பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை, புலவராற்றுப்படை என்று தனித்தனியாக இலக்கணம் வகுத்து கூறுகிறது. மேலும் “புலவராற்றுப்படை புத்தேட்கும் உரித்தே” (பன்னிருபாட்டியல் நூற்பா 322) என்னும் நூற்பாவில் புலவராற்றுப்படைத் தெங்வங்களை நோக்கியும் பாடப்படும் செய்தியினைப் பன்னிருபாட்டியல் குறிப்பிடுகிறது.

### திருமுருகாற்றுப்படை என்னும் புலவராற்றுப்படை

இவ்வாறு நோக்கும் போது, சங்க ஆற்றுப்படை நூல்களில் ஒன்றானத் திருமுருகாற்றுப்படைப் புலவராற்றுப்படையின் இலக்கணத்தைப் பின்பற்றியுள்ளது. திருமுருகாற்றுப்படைப் புலவராற்றுப்படை என்றும் அழைக்கப்படுகிறது. இந்நூல் ஆசிரியர் நக்கீரர் முருகனின் சிறப்புக்களை எடுத்தியம்புகிறார். நக்கீரர் என்ற கதைச்சொல்லி முருகனின் சிறப்புகளோடு அவர் பெற்ற அருளை தம்மைப்போல் இருக்கும் ஏனைய புலவர்களும் பெறவேண்டும் என்ற நோக்கில் ஆற்றுப்படுத்துகிறார். ஏனைய ஆற்றுப்படைகளில் இது முற்றிலும் மாறுபட்டது. புலவராற்றுப்படையின் இலக்கணமாகப் “பெரும்புலவனை ஆற்றுப்படுத்தன்று” என்ற அடிகளின் மூலம் புலவர் மற்றொரு புலவரை ஆற்றுப்படுத்துவதாக உள்ளது. நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும். இந்நூல் 317 அடிகளால் அமைந்த ஆசிரியப்பாவால் அமையப்பெற்றது. இதனைப் புலவராற்றுப்படை என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார். சங்கப் பனுவல்கள் காதல் வீரம் என்ற இருநிலைகளில் காணப்படும் நிலையில் நக்கீரர் சமயம் சார்ந்த கதையாடலை இங்கே கொண்டு வந்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். மக்கள் அனைவரும் முருகனிடம் அருள் பெறுதல் வேண்டும் என்ற பொதுமை நோக்கோடு இயற்றப்பட்டுள்ளது.

### நக்கீரர் என்னும் கதைச்சொல்லி

உலகில் உள்ள தீமைகளை அகற்றுவதே தத்துவ சாத்திரங்களின் பெருமுயற்சியாக உள்ளது. நக்கீரரும் இம்முயற்சியில் தன்மை ஈடுபடுத்தியுள்ளார். ஏனைய ஆற்றுப்படைகளில் இருந்தவனது வறுமையும் வந்தவனது செல்வமும் முரண்பட்டுத் தோன்றும். இங்கே உலகின் அடிப்படையான இன்பத்துன்பங்கள் நன்மை தீமைகளின் முரண்பாடு தோன்றுவதைக் காணலாம்.தே.லூர்து அவர்கள் குறிப்பிடும் போது கதைசொல்லிகளின் அனுபவமும் ஆளுமையும் வேறுபட்டு அமைகின்றன. அவர்களின் எண்ணங்களையும் ஆளுமைகளையும் பண்பாட்டுச் சூழல்களே தீர்மானிக்கின்றன. மேலும் தம் உணர்வுகளைப் புலப்படுத்த அவர்களுக்கே உரிய மொழி விளையாட்டினைப் பயன்படுத்திக் கட்டமைத்து தரக்கூடியவர்களாக கதைச்சொல்லிகள் உள்ளனர் என்கிறார். நக்கீரரும் கதை சொல்லுதலில் நிகழ்ச்சிகளை வரிசைப்பட எடுத்துரைக்கிறார். அவர் நன்மை பெற விரும்புவோனை நோக்கி உனக்கு விருப்பம் இருக்குமானால் நீ நினைத்தனை இப்போதே பெறலாம் என்று உறுதி கூறுகின்றார். நக்கீரர்

உலகியல் பார்வைக்கு முருகனின் காட்சியைப் பெருங்கதையாடலாக உருப்பெறச் செய்கிறார். இயற்கையை முருகனாகக் காட்சிப்படுத்துகிறார். "பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு" (திருமுருகாற்றுப்படைபா. அ. 2) ஒளி வடிவான ஞாயிற்றைக் காணும் பொழுதும் முருகன் காட்சி அளிக்கின்றான்.

வெயிலுக்கும் ஒளிக்கும் எதிர்மறையான மழையிலும் இருளிலும் தொட்டுப் பார்த்து அதன் உருண்டை வடிவால் கடப்பம் பூவென அறியும் இடத்திலும் அப்பூவிழ் ஆழ்ந்து ஒளிர்கின்றான் என்கின்றார். திரு.விக. அவர்கள் குறிப்பிடும்போது இயற்கைக்கும் முருகனுக்கும் தொடர்பு இருப்பதைப் போல் முருகனுக்கும் உயிர்கட்கும் தொடர்புண்டு என்கிறார். திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் முருகனின் ஆறுபடைகளை விளக்கும் போது திருப்பரங்குன்றம், இது சங்க காலத்திலேயே முருகனுக்குரிய தலமாய் விளங்கியது என்பதை "முருகன் தண்பரங் குன்றம்" என்னும் அகநானூற்றுப் பாடலடிக் குறிப்பிடுகிறது. மேலும் பரங்குன்றம் கூடலுக்கு மேற்கில் உள்ளது. மதுரைக்கும் பரங்குன்றத்திற்கும் இடையில் வயல்களில் தாமரை மலர்களில் வண்டுகள் இரவில் தங்கும். வைகறைப் பொழுதில் நெய்தல் பூவில் உள்ள தேனை நுகரும். ஞாயிறு தோன்றியவுடன் பரங்குன்றத்தில் உள்ள சுனைப்பூக்களில் சென்று ஆரவாரிக்கும். பரிபாடலில் பரங்குன்றத்தின் வருணனைக் காட்டிலும் திருமுருகாற்றுப்படையில் தெளிவான வருணனை இல்லை என்கிறார் இராசமாணிக்கனார். (பத்துப்பாட்டு ஆராய்ச்சி ப. 202) அலைவாய் இது கடல் அலைகள் மோதும் கரையோரப்பகுதியில் அமைந்துள்ளது. இதற்கு செந்தில் என்ற பெயருமுண்டு. "அலைவாய்ச் செருமிகு சேஎய்" அகநானூறு (261), "செந்தில் நெடுவேல்" புறநானூறு (55) இவ்வாறு பாராட்டப் பெற்ற அலைவாய் நன் மக்கள் புகழ்தற்குரியது. அவ்வாறு புகழினையுடைய ஊரில் முருகன் வான் வழியே சென்று தங்குவான் என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது. (திரு. முரு. அடி. 124 -25). ஆவிநன்குடி "முருகன் நற்போர் நெடுவேள் ஆவி" பொதினி மலையை ஆவிக்கோமானுக்குரிய நகர் என அகநானூற்று பாடலடிகள் குறிப்பிடுகின்றன. திருவாவிநன்குடி முருகனை முனிவரும் கந்தருவரும் வழிபடுதலை நக்கீரர் குறித்துள்ளார். திருமால் சிவன் இந்திரன்ஆகியோர் திருவாவிநன்குடி சென்றனர். மேலும் முப்பத்து மூவர் தேவரும் பதினெண் கணங்களும் சென்றனர். இவ்வாறு தன்னை அனைவரும் வந்து காணும்படி முருகன் ஆவிநன்குடியில் எழுந்தருளினான் என்று நக்கீரர் குறிப்பிடுகின்றார்.

**முருக வழிபாடு**

ஒரு குறிப்பிட்ட வழிபாடு மக்களிடையே செல்வாக்குப் பெற்றால்தான் அது சமுதாய நிகழ்ச்சியாக இடம்பெறும். அம்முறையில் திருமுருகாற்றுப்படையில் முருகனின் சிறப்புகள் வழிபடும் முறைகள் அதிகம் பேசப்படுவதுடன் முருகன் வழிபாடு சமுதாய நிகழ்ச்சியாக உருவாகி பல்வேறு வழிபாட்டு மரபுகளையும் முருகன் பற்றிய பல்வேறு கதையாடல்களையும் உருவாக்கியுள்ளது. முருக வழிபாடு வெறியாடல் என்ற சமுதாய நிகழ்ச்சியாக இடம்பெற்றுள்ளது. இவ்வழிபாடு சமூகத் தொடர்புடையதாகச் செல்வாக்குப் பெற்று காணப்படுகிறது. சாமி சிதம்பனாரும் இதை முன்னோர் வழிபாடாக இருக்கலாம் என்று குறிப்பிடுகிறார். தமிழண்ணல் அவர்கள் தொன்மைக் கதைகளில் முருகன் பற்றியக் கதைத் தொன்மையானதாகும் என்கிறார். சங்க இலக்கிய இருகண்களாகப் போற்றப்படும் காதல் வீரம் முருகன் வள்ளியை மணந்த கதை தமிழ் அகத்திணையாகவும் அம்முருகன் சூரனை வென்ற கதை தமிழ்ப் புறத்திணையாகவும் பார்க்கப்படுகிறது. மேலும் தமிழ் மக்களின் காதலும் வீரமும் சமயமும் முருகனால் வளர்ச்சியுற்றன. முருகன் நடுகற் கடவுளாகவும் வழிபடு தெய்வமாகவும் பின்பு சமயம் சார்ந்த கடவுளாகவும் விளங்குவதைச் சங்கப்பாக்கள் மற்றும் பிறவகை இலக்கியங்களாலும் அறிய இடமுண்டு. முருக வழிபாடு சிறுதெய்வ வழிபாடாக இருந்து பெருந்தெய்வ வழிபாட்டு மரபாக மாறியுள்ளதைப் பாரக்கமுடிகிறது. திருமுருகாற்றுப்படையில் முருகனின் பிறப்பு ஆறுமுகங்கள் பன்னிருதோள்களின் உருவக்காட்சி மாமரம் வெட்டியது அவுணரை அழித்து நான்முகனைச் சிறைபடுத்தியது திருமால் சிவன் இந்திரன் போன்ற தெய்வங்கள் நான்முகனுக்காக முருகனிடம் சென்று வேண்டிக்கொள்ளுதல்

மலைமகள் மகன் வானோர் தலைவன் போன்ற செய்திகள் கூறப்பட்டுள்ளது. முருகன் மலையும் மலை சார்ந்த நிலமாகிய குறிஞ்சிக் கடவுள்.

***நிறைவாக***

இதன் காரணமாக முருகன் குன்றுதோராடலை மேற்கொண்டவன் என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது. மேலும் பழமுதிர்ச்சோலைக்கும் உரிமை பூண்டவன். திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திவாவிநன்குடி திருஏரகம் ஆகிய நான்கு இடங்களிலும் கோவில் கொண்டு விளங்குபவன். ஊர்தோறும் விழா எடுக்கும் இடங்களிலும் வெறியாட்டுக் களம் காடு பொழில் ஆறுகள் குளங்கள் கடம்பமரம் குறமகள் வழிபாடு இயற்றும் இடம் எனப் பல்வேறு இடங்களில் உறைபவன் என்று நக்கீரர் முருகன் பற்றிய கதையாடலைக் கூறுகிறார்.

***துணை நின்ற நூல்கள்***

1. இராசமாணிக்கனார், மா. பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சாகித்திய அகாதெமி, 2012
2. கலியாணசுந்தரனார், வி. முருகன் அல்லது அழகு, பாரிநிலையம், சென்னை.
3. கைலாசபதி, க. தமிழ் வீரநிலைக் கவிதை, குமரன் புத்தக நிலையம், சென்னை.
4. சாமி சிதம்பரனார் . பத்துப்பாட்டும் பண்டைத்தமிழரும், அறிவுப் பதிப்பகம், சென்னை.
5. சாரதாம்பாள், செ. சங்கச் செவ்வியல் சங்க கிரேக்க ஒப்பீடு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2010.
6. சோமசுந்தரனார், பொ. வே. பத்துப்பாட்டுமூலமும் உரையும் (தொகுதி-1), திருநெல்வேலி தென்னிந்தியசைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 2007.
7. விமலானந்தம், மது.ச. தமிழ் இலக்கிய வரலாறு, முல்லை நிலையம், சென்னை, 2018.
8. லூர்து, தே. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம் பாளையங்கோட்டை.